முருகப்பெருமான் துணை

**மகான் இயற்பகை நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

14.04.2021, புதன்கிழமை

1. அரங்கனே கலியில் கிடைத்த
ஆற்றல் மிக்க மகா ஞானி
வரங்கள் பெற்று ஆறுமுகனிடம்
வள்ளலாய் வாழும் ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் பிலவ தகர்திங்கள்
இனிமைபட முதல்திகதி புந்தி வாரம்
(பிலவ ஆண்டு சித்திரை மாதம் முதல் நாள், 14.04.2021 புதன்கிழமை)
இயம்பிடுவேன் இயற்பகை நாயனார் யானும்
3. யானும் யோகபிரசன்ன ஆசியை
உலகநலம் பெறவேண்டி உரைப்பேன்
ஞானமான தமிழ்ப்புத்தாண்டு துவக்க
நன்னாளில் ஞானிகள் மகிழ்ந்து
4. மகிழ்ந்துமே ஆசிகள் வழங்கி
மகான் அரங்கனை அனுகி
அகிலம் பாதுகாப்பு பெறவும்
அன்னதான சேவையை வளர்க்கவும்
5. வளர்க்கவும் அருளாக இணைய
வளமான நிலைகள் பெற
தளர்விலா ஆக்கை நலம்
தடையில்லா ஞானபலம் பெற
6. பலம்பெற கலியுக மக்கள்
பணிந்து பிரணவக்குடிலுக்கு வந்து
பலம்தரும் தீட்சை ஆசி பெற
பாடிடுவேன் சர்வபலம் இதுநாளில் அடைவர்
7. அடையவே இவை நன்னாளில்
அரங்கன் தடம் சித்திர அன்னம்
தடையற அருளமுதாக வழங்க
தக்க பிரசாதமாக அதில் சக்தியூட்டி
8. சக்தியூட்டி மகா சக்திகளும்
சரவணப் பெருமானும் இறங்கி
சக்தி தந்து அருமருந்தாக
சகலருக்கும் பாதுகாப்பு தந்து அருள்வர்
9. அருளவே பிலவ ஆண்டதன்
ஆரம்பம் அநீதி சக்திகளை
இருளில் தள்ளி பிளந்துமே
இல்லாமை ஆக்கி இந்த கலியில்

10. கலியில் ஞானவான்களை
கட்டமில்லா வாழச் செய்து
அழியாமை தந்து பேருலகமே
ஆன்மீக ஞானலோகமாக மாற்றம் பெறும்

11. மாற்றம் தரும் தவசி அரங்கன்
மகத்துவம் உலகறிந்து தெளியும்
ஆற்றல் மிக்க யோக ஆண்டாகுமிது
அறிவித்த யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–